## தேசிய சேமிப்பு வங்கி - 2015

தேசிய சேமிப்பு வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறித்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் – வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் – தொகுதி**

தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஏஎஸ்)

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலையில் உள்ளடங்கிய ரூபா 42.47 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டிட நிர்மாண வேலைகள் பல்வேறு காரணங்களினால் பின்னர் கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மேலே ஏற்பட்ட கிரயம் மீள இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றாக அமைந்திருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 200,000 செலவிட்டு மஹியங்கணையில் கொள்வனவு செய்யப்பட்ட 28.14 பேர்ச்சஸ் பரப்பளவுள்ள இரண்டு காணிகள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அந்தக் காணிகளில் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்கள் ரூபா 1.6 மில்லியனிற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அத்தகைய காணிகள் மீள்மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட ஆறு கிளைகளை மாற்றியமைப்பதற்காக ரூபா 13.6 மில்லியன் வங்கிக்கு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செலவினம் உரிய கணக்குகளிற்கு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்பாடற்ற கணக்கு மீது பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 716 மில்லியனில், ரூபா 442.3 மில்லியன் தொகை அறவிடப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஆ) ரூபா 94.3 மில்லியன் தொகையான மோசடியான காசு மீளப்பெறல்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா 67.8 மில்லியனால் அல்லது 256 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அந்த அதிகரிப்பில், ரூபா 43 மில்லியன் தொகை அல்லது 162 சதவீதம் வங்கியின் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள பலவீனங்களின் விளைவால் தகவல் தொழில்நுட்ப ஊடுறுவல் (IT hacking) மூலம் ஏரீஎம் (ATM) இலிருந்து மோசடியான காசு மீளப்பெறுதல்கள் காரணமாக பிரதானமாக ஏற்பட்டிருந்தது.

(இ) வைப்பு தேறல் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 2.7 மில்லியன் மீதியானது தீர்ப்பனவு செய்யப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசாளரின் மிகை ரூபா 1.45 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1.4 மில்லியன் அல்லது 97 சதவீதம் இது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தன.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | 10 ஆண்டுகளிற்கு மேலாக செயற்பாடற்றிருந்த வைப்புக்கள் "கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள்" கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,435.72 ஆன அத்தகைய தொகை குறிப்பிட்ட கணக்கிற்கு மாற்றப்படாமல் செயற்பாடற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் அத்தியாயம் | வங்கியானது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் வங்கியின் ஊழியர்களின் சார்பில் அதன் சொந்த நிதிகளிலிருந்து ரூபா 134.84 மில்லியன் தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பிஏவைஈ) செலுத்தியிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் அத்தியாயம் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னரான மூன்று மாதங்களில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைபு பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கியானது கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக வருடாந்த பாதீட்டிற்கான சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் போது இணங்கியிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 ஒக்தோபர் 05 இன் 06 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு 2006 சனவரி 25 இன் 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் | |
| | (i) 2.8.4 ஆம் வழிகாட்டல் | திணைக்களத் தலைவர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவை (ரீஈசீ) நியமிக்க வேண்டிய போதிலும் வழிகாட்டலிற்கு முரணாக பின்வரும் கொள்வனவுகள் தொடர்பில் ரீஈசீ ஐ கொள்வனவுக் குழு நியமித்திருந்தது.<br><br>• ரூபா 6.82 மில்லியன் பெறுமதியான உருக்கு அலுமாரிகள் மற்றும் கபினெற்றுக்களின் கொள்வனவு.<br><br>• ரூபா 4.25 மில்லியன் பெறுமதியான பயர்வோல் (Firewall) முறைமையின் கொள்வனவு.<br><br>• ரூபா 8.43 மில்லியனிற்கு கிளைகள் மற்றும் பிரிவிற்கான ஐரீ (IT) உபகரணத்தின் கொள்வனவு.<br><br>• ரூபா 12.37 மில்லியன் தொகையான அலுவலக உபகரணத்தின் கொள்வனவு. |
| | (ii) 2.12 ஆம் வழிகாட்டல் | கொள்வனவுக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் அனைத்து உறுப்பினர்களும் அதன் முதலாவது கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வெளிப்படுத்தலொன்று கையொப்பமிடுவதற்கு வேண்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய வெளிப்படுத்தல் ஆகக்குறைந்தது 5 ஆண்டு காலப்பகுதிக்கு பாதுகாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது ரூபா 6.8 மில்லியன், ரூபா 4.25 மில்லியன் மற்றும் ரூபா 8.43 மில்லியன் பெறுமதியான முறையே உருக்கு அலுமாரிகள் மற்றும் கபினெற்றுக்கள், பயர்வோல் (Firewall) முறைமை மற்றும் கிளைகள் மற்றும் பிரிவிற்கான ஐரீ (IT) உபகரணம் என்பவற்றின் கொள்வனவுடன் இணங்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 8.9 ஆம் வழிகாட்டல் | ரூபா 500,000 ஐ விஞ்சிய ஒப்பந்தப் பெறுமதிக்குரிய ஒப்பந்ததாரருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் பின்வரும் கொள்வனவுகள் தொடர்பில் இந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>• 2015 ஆம் ஆண்டு சிங்கள/ தமிழ் மற்றும் இந்து புது வருடத்திற்கான ரூபா 33.1 மில்லியன் பெறுமதியான பரிசுப் பொருட்களின் கொள்வனவு.<br><br>• ரூபா 6.89 மில்லியனிற்கான 5 தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் கொள்வனவு.<br><br>• ரூபா 12.37 மில்லியனிற்கான அலுவலக உபகரணத்தின் கொள்வனவு. |
| (iv) | 8.12.3 ஆம் வழிகாட்டல் | வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய இணங்கப்பட்ட விதிமுறைகளிற்கிணங்க உள்ளன என பொறுப்பான உத்தியோகத்தரால் சான்றிதழொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டு சிங்கள/ தமிழ் மற்றும் இந்து புது வருடத்திற்கான ரூபா 33.1 மில்லியன் பெறுமதியான பரிசுப் பொருட்களின் கொள்வனவு தொடர்பில் இது இணங்கியிருக்கவில்லை. |
| (உ) | வங்கியின் முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் 7.1.2 (i) ஆம் பிரிவு | வங்கி மூலதனக் கலவையின் 10 சதவீதத்தை விஞ்சாமல் கம்பனி எதிலாவதும் முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறிப்பிட்ட கொமர்ஷல் வங்கியிலும் குத்தகைக் கம்பனியிலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,088 மில்லியன் முதலீடுகள் தொடர்பில் இணங்கியிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 யூன் 26 ஆம் திகதிய 507/2001 ஆம் இலக்க பொது முகாமையாளரின் சுற்றறிக்கையின் 19 ஆம் அத்தியாயம் மற்றும் வங்கியின் தங்க நகை அடகுக் கைநூலின் 14.2 ஆம் அத்தியாயம் | • நாளாந்த அடிப்படையில் பதவியணியினருக்கு வழங்கப்பட்ட தங்க நகை அடகு முற்பணங்களின் விபரங்களை பதிவுசெய்வதற்கு தனியான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். எவ்வாறாயினும், தலைமை அலுவலகத்திலுள்ள கிளையில் நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட்ட அடிப்படையில் அத்தகைய பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.<br><br>• சுற்றறிக்கையின் "A" பந்தியின் பிரகாரம், பதவியணி உறுப்பினர் ஆண்டொன்றிற்கு ஆகக்கூடியது 3 தடவைகள் தங்க நகை அடகு முற்பணங்களை பெற முடியும். எவ்வாறாயினும், தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது தெரிவுசெய்யப்பட்ட 4 கிளைகளில் பதவியணி உறுப்பினர்களிற்கு 3 தடவைகளிற்கு மேலாக ரூபா 4.86 மில்லியன் தொகையான தங்க நகை அடகு முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| | • தங்க நகை அடகிற்காக ஒவ்வொரு தங்க நகை அடகுப் பொருளையும் சமர்ப்பிக்கும் போது அவற்றை தனிப்பட்ட முறையில் அவற்றை சரிபார்ப்பதற்கும் வழங்கக்கூடிய முற்பணத் தொகையை தீர்மானிப்பதற்கும் தங்க நகை அடகு முகாமையாளர் பொறுப்பாகவுள்ள போதிலும் சில சந்தர்ப்பங்களில் வெள்ளவத்தை மற்றும் தலைமை அலுவலகத்தின் கிளைக் கணக்காய்வின் போது 18 கரட்டை விட குறைவான தங்க நகை அடகுப் பொருட்கள் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தன. |
| (எ) 2005 யூலை 18 ஆம் திகதிய 614/2005 ஆம் இலக்க பொது முகாமையாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயம் | ரூபா 1 மில்லியனை விஞ்சிய வங்கி உத்தரவாதங்களிற்கு ஒரு சதவீத (1%) வருடாந்த தரகு அறவிடப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட காப்புறுதிக் கம்பனியின் சார்பில் 270 நாட்கள் காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட ரூபா 1,010.55 மில்லியன் பெறுமதியான எச்ஓபீ/எல்ஜீ/2015/03 ஆம் இலக்க வங்கி உத்தரவாதம் மீது 0.25 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 10,472 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 13,034 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,562 மில்லியன் அல்லது 24 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

மீளாய்வாண்டின் போது வங்கியின் துணைக் கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 307 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 253 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 54 மில்லியன் வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

வங்கியின் பெறுமதிச் சேர்க்கை கூற்றின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 25,886 மில்லியனாக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீத அதிகரிப்பினை சுட்டிக்காட்டியது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 174 கிளைகள், 12 தபால் கிளைகள், 04 பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றின் ரூபா 16,907 மில்லியன் கூட்டுத்தொகையான இலாபங்கள் மற்றும் 59 கிளைகள் மற்றும் 01 பிரிவு என்பவற்றின் ரூபா 1,436 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் என்பன மீளாய்வாண்டிற்கான ரூபா 13,034 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தில் உள்ளடங்கியுள்ளன.

(ஆ) ரூபா 77,890 மில்லியன் முன்னைய ஆண்டு வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வங்கியின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 79,282 மில்லியன் ஆனமையால் மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 1,392 மில்லியன் அல்லது 1.8 சதவீத அதிகரிப்பினை காட்டுகின்றது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் துறை விகிதங்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளன.

| | | | துறை விகிதங்கள் * | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| (அ) | இலாபத்தன்மை விகிதம் | | | | |
| | (i) | சராசரி பங்குதாரர் நிதிகள் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 14.58 | 31.15 | 30.2 |
| | (ii) | சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 2 | 1.6 | 1.5 |
| | (iii) | வட்டி எல்லை | 3.6 | 3.32 | 3.0 |
| | (iv) | பதவியணிக் கிரயம் (ரூபா. மில்லியனில்) | 6,853 | 5,910 | 4,797 |
| (ஆ) | மூலதனப் போதுமை | | | | |
| | (i) | மொத்தச் சொத்துக்களிற்கான உரிமை மூலதனம் (தடவைகளின் எண்ணிக்கை) | | 26.16 | 33.51 |
| | (ii) | மூலதனப் போதுமை – தட்டு I (ஆகக்குறைந்தது 5%) | 21.97 | 17.83 | 20.46 |
| | (iii) | மூலதனப் போதுமை – தட்டு II (ஆகக்குறைந்தது 10%) | 20.35 | 16.34 | 18.96 |
| (இ) | திரவச் சொத்துக்கள் விகிதம் | | | | |
| | திரவத்தன்மை விகிதம் (சதவீதம்) | | 69.42 | 81.08 | 91.5 |

* இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற விசேட வங்கிக்கான வருடாந்தப் புள்ளிவிபரவியலின் 10 ஆண்டு சராசரி துறை விகிதத்திற்காக கருத்திற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) மற்றும் தேறிய வட்டி எல்லை என்பன முறையே 6.66 சதவீதம் மற்றும் 10.66 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அவை 2015 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் சராசரியை விடக் குறைவாகக் காணப்பட்டன.

- திரவத்தன்மை விகிதமானது கைத்தொழில் சராசரியை விட உயர்வாக இருந்த 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 11.38 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வங்கியின் செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வங்கியின் தொழிற்பாட்டுச் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| குறிகாட்டி | 2015 | 2014 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 245 | 236 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்லியன்) | 18.9 | 18.3 |
| தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் எண்ணிக்கை | 271 | 260 |
| பாடசாலை வங்கிப் பிரிவுகள் | 2,287 | 2,287 |
| முகவர் தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை | 4,063 | 4,063 |

மீளாய்வாண்டின் போது ஒன்பது கிளைகள் புதிதாக திறக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை ஏறத்தாழ 0.6 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் ஏரீஎம் வலையமைப்புக்கள் மீளாய்வாண்டின் போது 260 தொடக்கம் 271 வரை அதிகரித்திருந்தன.

### 4.2 சர்வதேச பிணைமுறி வழங்கல் - 2013 மற்றும் 2014

2012 திசெம்பர் 19 ஆந் திகதிய 12/1767/504/163 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களிற்கான கடன்களை வழங்கும் நோக்கத்திற்காக ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, வங்கியானது வருடாந்தம் 8.875 சதவீதம் மற்றும் 5.15 சதவீத வட்டி வீதத்தில் முறையே 2013 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகளை வழங்கியிருந்தது. அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் வங்கியின் கையளித்தல் ஞாபனக்குறிப்பு (Offering Memorandum) என்பவற்றின் பிரகாரம், ஐ.அ.டொலர் 750 மில்லியன் பிணைமுறிப் பெறுகையில் 50 சதவீதம் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளிலும், 25 சதவீதம் ஐ.அ.டொலர் பெயரளவுக் கடன்களிலும் 25 சதவீதம் இலங்கை ரூபா பெயரளவுக் கடன்களிலும் முதலீடு செய்யப்படுவதற்கு நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஐ.அ.டொலர் 750 மில்லியனில் 50 சதவீத மீதியானது ஒரே பகுதியில் டொலர் பெயரிடப்பட்ட கடன்கள் மற்றும் ரூபா பெயரிடப்பட்ட கடன்களிற்காக பணவளிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் ஐ.அ.டொலர் 104.43 மில்லியன் மற்றும் ரூபா 13,669.05 மில்லியன் மாத்திரம் முறையே பணவளிப்புச் செய்யப்பட்டு மீதி திறைசேரிப் பிணைமுறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பிணைமுறி பெறுகைகளின் முழுத் தொகையும் வங்கியின் கையளித்தல் ஞாபனக்குறிப்பின் தேவைப்பாட்டினை கருத்திற்கொள்ளாமல் திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.3 புதிய கிளைகளின் நிர்மாணங்களிலுள்ள தாமதங்கள்**

2011 இலிருந்து தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பம்பலபிட்டிய, கல்கிசை மற்றும் நீர்கொழும்பிலுள்ள 03 கிளைகளின் நிர்மாணம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 வரையிலும் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டில் அந்த கிளைகளை செயற்படுத்துவதற்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்திற்காக ரூபா 44,452,000 தொகையான வாடகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தால் அவ்வாறு செலுத்தப்பட்ட வாடகையை சேமித்திருக்க முடிந்திருக்கும்.

**4.4 கடன் நிர்வாகம்**

**4.4.1 செயற்பாடற்ற கடன்கள் எதிர் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் செயற்பாடற்றிருந்த கடன்கள் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கடன் வகை | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை | | | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | | மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | செயற்பாடற்ற கடன்கள் | |
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை | கடன்களின் எண்ணிக்கை | தொகை |
| | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் |
| அலங்கார கடன்கள் | 118 | 107 | 6 | 5 | 97 | 83 | 8 | 5 |
| ஓட்டோ கடன்கள் | 9,280 | 648 | 520 | 44 | 9,516 | 787 | 299 | 30 |
| வர்த்தகக் கடன்கள் | 1 | 1,000 | 1 | 1,000 | 1 | 1,000 | - | - |
| பணிக்கொடை | 1 | 3,163 | - | - | - | - | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | 223 | 374 | 42 | 68 | 243 | 364 | 49 | 73 |
| அரசாங்க கடன்கள் | 41,612 | 27,113 | 845 | 452 | 36,454 | 24,257 | 1,154 | 651 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் | 30,494 | 24,636 | 2,325 | 1,394 | 30,344 | 23,080 | 3,117 | 1,623 |
| வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள் - மிஹிந்து | - | - | - | 1 | 3 | 2 | 2 | 1 |
| என்எச்டி ஜன செவன | 8 | 3,627 | - | - | 7 | 3,576 | - | - |
| உத்தரவாதம் மீதான தனிப்பட்ட கடன்கள் | 95,913 | 35,394 | 4,127 | 549 | 60,051 | 13,539 | 3,047 | 355 |
| ஈட்டுக்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 152 | 146 | 18 | 21 | 165 | 143 | 29 | 36 |
| செயற்திட்டக் கடன்கள் | 51 | 79,917 | - | - | 66 | 79,418 | 1 | 30 |
| பதவியணியினர் கடன்கள் | 9,745 | 3,918 | - | - | 18,072 | 4,309 | - | - |
| பதவியணியினர் வாகனக் கடன்கள் | 521 | 380 | - | - | 400 | 141 | - | - |
| பல்கலைக்கழக பதவியணியினர் வீடமைப்புக் கடன்கள் | 378 | 348 | 6 | 6 | 291 | 263 | 12 | 11 |
| பதவியணியினர் மோட்டார்சைக்கிள் கடன்கள் | - | 1 | - | - | 29 | 2 | - | - |
| டிரிபியச | - | 3 | - | - | 14 | 4 | - | - |
| ரட்ட இதுறு கடன்கள் | 329 | 31 | - | 6 | 742 | 46 | 498 | 26 |
| ஏனையவைகள் | - | - | - | - | 1 | 1,414 | - | - |
| **மொத்தம்** | **188,826** | **180,806** | **7,890** | **3,546** | **156,496** | **152,428** | **8,216** | **2,841** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியானது 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 180,806 மில்லியன் தொகையான கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 3,546 மில்லியன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன் மீதிகளாக காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மொத்த செயற்பாடற்ற கடன்களின் பெறுமதியானது 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்தக் கடன் பெறுமதியில் 2 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 4.4.2 செயற்பாடற்ற கடன்களின் வயதுப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் செயற்பாடற்ற கடன்களின் வயதுப் பகுப்பாய்வு கீழ்வருமாறுள்ளது.

| **கடன் வகை** | **வயதுப் பகுப்பாய்வு** | | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | **1 ஆண்டு வரை** | **1 – 3 ஆண்டுகள்** | **3 – 5 ஆண்டுகள்** | **5 அண்டுகளிற்கு மேல்** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| அலங்கார கடன்கள் | 3.82 | 1.06 | 0.36 | - | 5.24 |
| ஓட்டோ கடன்கள் | 43.99 | - | - | - | 43.99 |
| வர்த்தகக் கடன்கள் | - | - | 1,000 | - | 1,000 |
| வெளிநாட்டுக் கடன்கள் | 36.58 | 25.44 | 5.94 | - | 67.95 |
| அரசாங்க கடன்கள் | 415.08 | 32.68 | 2.67 | 1.64 | 452.08 |
| வீடமைப்பு மற்றும் ஆதனம் | 1,011.39 | 198.79 | 86.90 | 97.00 | 1,394.09 |
| உத்தரவாதம் மீதான தனிப்பட்ட கடன்கள் | 491.25 | 42.83 | 7.06 | 7.41 | 548.55 |
| ஈட்டுக்கள் மீதான தனிப்பட்ட கடன்கள் | 3.55 | 10.30 | 2.67 | 4.81 | 21.33 |
| பல்கலைக்கழக பதவியணியினர் கடன்கள் | 5.70 | - | - | - | 5.70 |
| மிஹிந்து | - | 1.20 | - | - | 1.20 |
| ரட்ட இதுறு கடன்கள் | 0.64 | 0.54 | 0.22 | 4.78 | 6.18 |
| **மொத்தம்** | **2,012.00** | **312.84** | **1,105.82** | **115.64** | **3,546.31** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற கடனில் ரூபா 1,221.47 மில்லியன் அல்லது 34 சதவீதம் 3 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) ரூபா 1,000 மில்லியன் தொகையான 3 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குட்பட்ட செயற்பாடற்ற கடன்களின் தொண்ணூறு சதவீதம் குறிப்பிட்ட அமைப்பொன்றிற்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கடனைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(இ) 5 ஆண்டுகளிற்கு மேலாக செயற்பாடற்றிருந்த வீடமைப்புக் கடன்கள் ஐந்து ஆண்டுகளிற்கு மேலான மொத்த செயற்பாடற்றவையில் 84 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 97 மில்லியனாக காணப்பட்டது.

(ஈ) ''ரட்ட இதுறு கடன்களின்'' மொத்த செயற்பாடற்ற கடன் மீதிகளில் 77 சதவீதம் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டன.

### 4.4.3 இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவிகள் வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பதவியணிக் கடன்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 44 இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள், பதவிகள் வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், சேவைகளிலிருந்து விலகிய மற்றும் நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4.64 மில்லியன் தொகையானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 1,337.49 மில்லியன் ஊழியர் கடன்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 4.4.4 செயற்திட்டக் கடன்கள்

வீடமைப்பு நிர்மாணத் திட்டத்திற்காக 20 சதவீத வட்டி வீதத்தில் 1996 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் தொகையான இரண்டு கடன்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தக் கடன் 1999 யூலை அளவில் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் தனியொரு தவணைப்பணமொன்றேனும் செலுத்தப்படாமல் முழுக் கடனும் நிலுவையாக இருந்தன.

(ii) 2004 நவம்பர் 06 இல் உள்ளவாறான மேற்குறிப்பிட்ட கடன்கள் தொடர்பில் வங்கிக்கு செலுத்தப்பட்ட வட்டிகள் முறையே ரூபா 8.52 மில்லியன் மற்றும் ரூபா 1.55 மில்லியன் ஆக இருந்தன.

(iii) 2006 மார்ச் 10 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் பிரகாரம், கடனைப் பயன்படுத்தி சுவீகரிக்கப்பட வேண்டிய காணியின் பரப்பளவு 6 ஏக்கர்கள், 3 றூட்கள் மற்றும் 21.75 பேர்ச்சஸாக இருந்த போதிலும் உரிய விலைமதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பட வரைவு திட்டங்கள் என்பவற்றின் பிரகாரம், காணியின் பரப்பளவு 6 ஏக்கர்கள், 2 றூட்கள் மற்றும் 12.8 பேர்ச்சஸாக இருந்தமையால் 1 றூட்கள் மற்றும் 8.95 பேர்ச்சஸ் வேறுபாடு கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(iv) ரூபா 184 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட ஆதனத்தின் ஒரு பகுதி இலங்கை கடற்படையால் உடமையாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 113 மில்லியன் பெறுமதியான காணி வங்கிக்கு சொந்தமாக உள்ளது. எவ்வாறாயினும், வங்கியால் பெறப்பட்ட விலைமதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், காணியின் உண்மைப் பெறுமதி ரூபா 70.3 மில்லியன் மாத்திரமாக இருந்ததுடன் அதற்கிணங்க, ரூபா 42.7 மில்லியன் தொகையைப் பெறமுடியாதிருந்தது.

(v) ரூபா 13.3 மில்லியன் பெறுமதியான மேற்குறிப்பிட்ட காணிகளின் மூன்று துண்டுகள் 2008 யூன் 02 ஆந் திகதிய 1604/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரைக்கும் வங்கியால் இது தொடர்பில் எந்த இழப்பீடும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.4.5 தங்க நகை அடகு முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியால் வழங்கப்பட்ட மொத்த தங்க நகை அடகு முற்பணங்கள் ரூபா 26,489 மில்லியனாக இருந்ததுடன் அவற்றின் மீதான சந்தைப் பெறுமதி ரூபா 37,838 மில்லியனாக இருந்தது. அவற்றில் ரூபா 5,484 மில்லியன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற தங்க நகை அடகு முற்பணங்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. சந்தையில் தங்க விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தங்க நகை அடகு முற்பணங்களிலும் அவற்றின் மீதான சந்தைப் பெறுமதியிலும் முறையே 20 சதவீதமான மற்றும் 18 சதவீதமான குறைவு காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற தங்க நகை அடகு முற்பணங்கள் தொடர்பாக ரூபா 380 மில்லியன் தொகை பதிவளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியின் தங்க நகை அடகுக் கைநூலின் 14.2 ஆம் பந்தியின் பிரகாரம், 18 கரட்டை விடக் குறைந்த தங்க நகைப் பொருட்களெதனையும் ஏற்றுக்கொள்வதற்கு கிளைகள் அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும் தெரிவுசெய்யப்பட்ட 04 கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது 18 கரட்டை விடக் குறைவாக இருந்த தங்க நகைப் பொருட்கள் மீது ரூபா 3.8 மில்லியன் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததென வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

### 4.5 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 204.44 மில்லியன் கூட்டுத்தொகையான தங்க நகை அடகுக் கடன்களுக்கெதிராக போலிப் பொருட்கள் மற்றும் குறைந்த கரட் தங்கம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டமை, நிலையான வைப்புக்களுக்கெதிராக முறையற்று வழங்கப்பட்ட கடன்கள், ஏரீஎம் இலிருந்தான மோசடியான காசு மீளப்பெறல்கள், மீதி உறுதிப்படுத்தல்களை முறையற்று வழங்குதல், இறந்த நபர்களிற்குச் சொந்தமான நிலையான வைப்பின் மோசடியான மீளப்பெறல் போன்ற மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பரப்புக்களிலுள்ள பலவீனங்கள் காரணமாக பதுளை, பண்டாரவளை, ராகமை, இரத்தினபுரி, பொத்துவில் மற்றும் கொச்சிக்கடை கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 4.6 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

வங்கியானது எட்டு காணிகளில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக காணிகளின் சட்ட ரீதியான உரிமைத்துவத்தை வங்கிக்கு பெற்றுக்கொள்ளாமல் ரூபா 83.6 மில்லியனை செலவிட்டிருந்தது.

## 4.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 சனவரி 29 இல் வங்கியால் சிற்றம்பலம் வீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35 மில்லியன் பெறுமதியான 0.479 ஹெக்டெயர் பரப்பளவுள்ள காணியை இலங்கை கடற்படை சுவீகரித்திருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் காணியின் சுவீகரிப்பு பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டிற்கான பரீட்சிப்பு 2012 யூன் 28 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றின் மீதான இழப்பீடு மற்றும் வட்டி என்பன பரீட்சிப்புத் திகதியிலிருந்து மதிப்பீட்டின் மீது செலுத்தப்பட வேண்டும் என கொழும்பு பிரதேச செயலாளர் குறிப்பிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவித இழப்பீடும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கிக்கான 18 மாடிக் கட்டிடமொன்றைக் நிர்மாணிப்பதற்கு 2008 இலிருந்து ரூபா 35.23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் வருகின்றதன் காரணமாக முன்னைய ஆண்டுகளின் போது நிர்மாணிப்பெதுவும் மேற்கொள்ளப்படாமல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலையில் இது காட்டப்பட்டிருந்தது. ஆகையால் அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றாக அமைந்திருந்தது.

(இ) 2007/43 ஆம் இலக்க திட்டத்தைக் கொண்டிருந்த ஜுலியானா ஹோட்டலிற்கு அருகிலுள்ள காணி ரூபா 82 மில்லியன் ஆரம்பக் கொடுப்பனவு மற்றும் குத்தகைக் காலப்பகுதியின் 50 வருடங்களிற்காக ரூபா 1,000 வருடாந்த நில வாடகை என்பவற்றினூடாக பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணியின் பெறுமதி ரூபா 94.30 மில்லியனாக இருந்ததுடன் இதுவரை பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4.8 முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 46 விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளிலுள்ள ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 7,390.44 மில்லியன் தொகையாகும். அவற்றில், 34.28 சதவீதத்தை பிதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,534.03 மில்லியன் தொகை நீணடகால அடிப்படையில் 3 விலைகூறப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. 46 விலைகூறப்பட்ட கம்பனிகளில் 41 கம்பனிகளின் பங்குகளின் சந்தைப் பெறுமதி 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,414.26 மில்லியன் பெறுமதியால் குறைவடைந்திருந்த அதேநேரம் 5 கம்பனிகளின் பங்குகளின் சந்தைப் பெறுமதி ரூபா 994.31 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதற்கிணங்க, முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த பங்குகளின் சந்தைப் பெறுமதி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 419.95 மில்லியனால் குறைவடைந்திருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைவடைந்திருந்த சந்தைப் பெறுமதிக்கான முதலீட்டுக் கிரயம் ரூபா 4,741.88 மில்லியனாக இருந்ததுடன் இது ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயத்தின் 64 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) தொலைத்தொடர்புக் கம்பனி மற்றும் தனியார் வர்த்தக வங்கியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,747,487,382 முதலீடுகள் மீதான சராசரி பங்கிலாபத் திரும்பல் (கடந்த 5 ஆண்டுகளிற்கான) முறையே 2.14 சதவீதம் மற்றும் 4.56 சதவீதமான குறைந்த வட்டி வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(இ) 16 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,362.97 மில்லியன் முதலீடுகள் மீதான பங்கிலாபங்கள் 2015 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருக்காததுடன் இது மேற்குறிப்பிடப்பட்ட 46 விலைகூறப்பட்ட கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த முதலீடுகளின் 18.44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஈ) கடந்த நான்கு ஆண்டுகளிற்கு மேலாக நான்கு கம்பனிகளில் காணப்பட்ட பங்கிலாபம் பெறப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 4 கம்பனிகளின் முதலீட்டுக் கிரயம் ரூபா 200.06 மில்லியன் தொகையாகும்.

(உ) சந்தை பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்த 5 விலைகூறப்பட்ட கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது 3 ஆண்டுகளிற்கு மேலாக பங்கிலாப வருமானமெதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. அந்தக் கம்பனிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டுக் கிரயம் ரூபா 668.09 மில்லியனாக இருந்தது. அத் திகதியில் உள்ளவாறான அந்த முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூபா 409.55 மில்லியனாக இருந்தது.

(ஊ) 2 விலைகூறப்பட்ட கம்பனிகளின் சந்தைப் பெறுமதி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 48.16 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 8.75 மில்லியனான மேலுமொரு முதலீட்டினை வங்கி மேற்கொண்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்தக் கம்பனிகளின் முதலீட்டுக் கிரயம் ரூபா 237.26 மில்லியன் தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தக் கம்பனிகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூபா 51.85 மில்லியனாக இருந்தது.

மேலும், 2015 ஆம் ஆண்டின் போது 11 விலைகூறப்பட்ட கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய முதலீடுகள் ரூபா 645.04 மில்லியன் தொகையானதுடன் அதில் 10 கம்பனிகளின் சந்தைப் பெறுமதி 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 95.70 மில்லியனால் பெறுமதியில் குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க, வீழ்சிசியடைந்த பங்குகளின் ஒட்டுமொத்த முதலீட்டுக் கிரயம் ரூபா 640.39 மில்லியனாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 645.04 மில்லியன் ஒட்டுமொத்த புதிய முதலீட்டுப் பெறுமதியின் 99 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(எ) வங்கியானது 1974 யூலை 01 இல் குறிப்பிட்ட கம்பனியொன்றில் ரூபா 0.13 மில்லியன் தொகையான 20,000 உரிமைப் பங்குகளில் முதலீடு செய்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் இறுதி வரை இந்த முதலீட்டிலிருந்து பெறப்பட்ட மொத்தப் பங்கிலாபம் ரூபா 0.94 மில்லியனாக மாத்திரம் இருந்ததுடன் அதன் பின்னர் பங்கிலாபம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் 4,113 ஆக இருந்ததுடன் வங்கியானது 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்று தரத்திலுள்ள 6 பதவிகள், மேற்பார்வைத் தரத்திலுள்ள ஒரு பதவி, பதவிநிலையற்ற தரத்திலுள்ள 681 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்திலுள்ள 135 பதவிகள் உள்ளடங்கலாக 2,813 நிரந்தர அடிப்படையிலான ஊழியர்களையும் 823 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் வேலைக்கமர்த்தியிருந்தது.

(ஆ) ஊழியரொருவருக்கான ஆளணிக் கிரயம் கடந்த ஐந்து ஆண்டுகளிற்குள் பின்வருமாறு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

| | ரூபா. 000 | | | | |
|---|---|---|---|---|---|
| | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
| ஊழியரொருவருக்கான ஆளணிக் கிரயம் (மொத்த ஆளணிக் கிரயம்/ ஊழியர்களின் எண்ணிக்கை) | 1,626 | 1,429 | 1,430 | 1,303 | 1,264 |

(இ) உள்ளபடியான பதவியணியினரில் 2009 பதவிகள் அல்லது 55 சதவீதம் வங்கி உதவியாளர்களின் பதவியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் வங்கியானது அத்தகைய பதவியின் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றாக 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் பின்பற்றப்பட்டிருந்த போட்டிப் பரீட்சைக்குப் பதிலாக 2005 ஆம் ஆண்டின் பின்னர் நேர்முகப்பரீட்சை அடிப்படையை மாத்திரம் பின்பற்றியிருந்தது. பரீட்சை அடிப்படையில் பொருத்தமான நபர்கள் 28 வயதிற்குக் குறைந்தவராக இருக்க வேண்டியதுடன் நேர்முகப்பரீட்சைக்காக தெரிவுசெய்யப்படுவதற்குப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், நேர்முகப்பரீட்சை அடிப்படையில் முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட பட்டியலிலிருந்து நபர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். மேலும், புதிய நடைமுறையின் கீழ் வயதெல்லை 25 ஆண்டுகளிற்கு குறைக்கப்பட்டிருந்ததுடன் திறந்த விளம்பரங்கள் மற்றும் போட்டிப் பரீட்சைகள் நீக்கப்பட்டிருந்தன. இதனால், இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிவாய்ந்த நபர்களிற்கான சமமான வாய்ப்பு புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையை மாற்றியமைத்ததுடன் இழக்கப்பட்டிருந்தது.

## 4.10 சந்தைப் பங்கு

வங்கித் தொழிலிலுள்ள வைப்புக்கள் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சதவீதமாக வங்கியின் சந்தைப் பங்கு தொடர்பான விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **சந்தைப் பங்கு** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| வைப்புக்கள் | 10.77 | 11.51 | 11.51 | 12.20 | 13.38 |
| கடன் மற்றும் முற்பணங்கள் | 5.65 | 5.59 | 4.52 | 4.66 | 4.50 |

வைப்புக்கள் தொடர்பான சந்தைப் பங்கு கடந்த ஐந்து ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக குறைவடைந்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் மாத்திரமே கடன் மற்றும் முற்பணங்களின் சந்தைப் பங்கு குறைவடைந்திருந்தது.

## 4.11 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிர்ணயிக்கப்பட்ட பின்வரும் இலக்குகள் மீளாய்வாண்டின் போது அடையப்பட்டிருக்கவில்லை.

| இலக்கின் விபரம் | | வருடாந்த இலக்கு | அடையப்பெற்றது | இலக்கின் சதவீதமாக அடையப்பெற்றது |
|---|---|---|---|---|
| **01.** | **கிளை முகாமைத்துவம்** | | | |
| | **வைப்பு திரட்டலை முன்னேற்றுதல்** | | | |
| (i) | 2015 அளவில் ரூபா 635 பில்லியன் வைப்பு அடிப்படையை அடையும் நோக்கத்தை அடைவதற்கு வைப்புக்களை திரட்டுதல்.<br>கால வைப்பு | ரூபா. 40,800 மில்லியன் | ரூபா. 20,280 மில்லியன் | 50 |
| (ii) | கிளைகளை இடம்மாற்றுதல் | 9 கிளைகள் | 4 கிளைகள் | 44 |
| (iii) | ''டிரியா'' கடனை அதிகரித்தல் | 4800 கடன்கள் | 596 கடன்கள் | 12 |
| (iv) | வங்கியின் என்பிஎல் விகிதத்தைப் பேணுதல் | | | |
| (அ) | ஒட்டுமொத்தம் | 4.00% | 5.38% | என்பிஎல் விகித இலக்கு விஞ்சப்பட்டமை |
| (ஆ) | தங்க நகை அடகு | 5.11% | 20% | |
| (இ) | ஓட்டோ கடன் | 1.5% | 7.27% | |
| (ஈ) | வீடமைப்புக் கடன் | 3.0% | 3.85% | |
| (உ) | தனிப்பட்ட கடன் | 2.0% | 2.27% | |
| (v) | ஒவ்வொரு கிளையிலும் 50% ஆல் ரூபா 1,000 இற்கு குறைவாகவுள்ள சேமிப்புக் கணக்கு மீதியை அதிகரித்தல் | 50% ஆல் மீதியை அதிகரித்தல் | 6% | 12 |
| **02.** | **தபால் வங்கிச் செயற்பாடு** | | | |
| | ஏனைய வைப்புக்களினூடாக திரட்டுதல் | | | |
| • | போஸ்ரல் ஸ்மைல் | 500 | 204 | 41 |
| • | தெபல் ஹபன் | 300 | 152 | 51 |
| • | ஸ்திரீ தெபல் இதுறும் | 100 | 75 | 75 |
| • | போஸ்ரல் அவுறுதுவாசனா | 50 | 9.57 | 19 |

**03. சர்வதேச வங்கிச் செயற்பாடு**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | வெளிநாட்டு நாணய வைப்புக்களை திரட்டுதல் | ரூபா. 2,250 மில்லியன் | ரூபா. 1,003 மில்லியன் | 45 |
| (ii) | பொதுமக்கள் மற்றும் எதிர்பார்க்கும் குடிபெயர்ந்த பணியாளர்களிற்கிடையில் விழிப்புணர்வுகளை உருவாக்குதல் | 40 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நடாத்தப்படவில்லை | இல்லை |

**04. கூட்டிணைந்த கடன் வழங்கல் மற்றும் செயற்திட்ட நிதி**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | தேறிய அதிகரிப்பு | 37,717 மில்லியன் | 21,793 மில்லியன் | 58 |
| (ii) | கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (பிணைமுறி 1 இன் பெறுகைகளிலிருந்தான பணவளிப்பு) | ஐ.அ.டொலர் 60.05 மில்லியன் | ஐ.அ.டொலர் 34.65 மில்லியன் | 58 |
| (iii) | ரூபா கடன் (பிணைமுறி 1 இன் பெறுகைகளிலிருந்தான பணவளிப்பு) | ரூபா 3,500 மில்லியன் | ரூபா 1,408.02 மில்லியன் | 40 |

**05. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | சந்தைப்படுத்தல்/ நுட்பங்களை விற்பனை செய்தல்/ குறுக்கு விற்பனை செய்தல் | 8 | 4 | 50% |
| (ii) | வெளிநாட்டுப் பயிற்சி (பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை) | 44 | 16 | 36% |

**06. கணக்காய்வு மற்றும் கண்காணிப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | திடீர் கணக்காய்வு | 47 | 24 | 51% |
| (ii) | தகவல் முறைமை கணக்காய்வு | 10 | பூர்த்தி செய்யப்படவில்லை | இல்லை |

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பின்வரும் இலக்குகள் முகாமைத்துவத்தால் பின்னர் மீளப்பெறப்பட்டிருந்தன.

**இலக்கின் விபரம்**

-----------------------------

**01. கிளை முகாமைத்துவம்**

--------------------------------------

(அ) குடும்ப சேமிப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்துதல்

(ஆ) சேமிப்பு மையங்களை திறத்தல்

(இ) அசைவற்ற ஆதனங்கள் மீது உத்தரவாதக் கடிதங்களை வழங்குதல்

(ஈ) கட்டணங்களை சேகரிக்கும் வசதியை ஒழுங்குபடுத்துவதற்கு நிறுவனங்களுடன் கலந்தாலோசித்தல்

**02. சந்தைப்படுத்தல் பிரிவு**

-------------------------------------

(அ) சாதாரண தரப் பரீட்சையில் இத்துறு மித்துறு கணக்கு வைத்திருப்போர் சித்தியடைந்தமை தொடர்பில் அவர்களிற்கான புலமைப்பரிசில் திட்டம்

(ஆ) குடும்ப சேமிப்புக் கணக்குகள் மீதான விளம்பர பிரச்சாரங்கள்

(இ) வருமானத்தை அடிப்படையாகக்கொண்ட கட்டணத்தை அதிகரிப்பதற்கு தூண்டுதல் - பரீட்சைத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம், என்எஸ்பீஎம் போன்றவற்றுடனான கட்டணங்கள் சேகரிப்பு ஒழுங்குபடுத்தல்கள்

(ஈ) இலகுவான காசு அட்டைக்கான (Easy Cash Card) மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

**03. சில்லறை கடன் வழங்கல்**

------------------------------------------

(அ) புதிய பொருளை அறிமுகப்படுத்துதல்

(ஆ) கடன் திட்டத்தை மீளாய்வு செய்தல்

**04. கூட்டிணைந்த கடன் வழங்கல் மற்றும் செயற்திட்ட நிதி**

-------------------------------------------------------------------------------------------

(அ) முதலீட்டாளர் மன்றங்கள்/ கலந்துரையாடல்கள்/ கூட்டங்கள்

(ஆ) பிராந்தியங்களால் செயற்திட்டக் கடன்களை வழங்குதல்

(இ) விலைகூறப்பட்ட கடன் பத்திரங்களை வழங்குதல்

**05. மனித வள அபிவிருத்தி**

---------------------------------------

மனித வள முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துதல்

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

----------------------------------------------------------------

**உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்காக 158 கணக்காய்வு வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 133 கணக்காய்வு வேலைத்திட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது 47 திடீர் கணக்காய்வுகளை நடாத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 24 கணக்காய்வுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட விபரமான அறிக்கையொன்றினூடாக தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன் மற்றும் தங்க நகை அடகுபிடித்தல் நிர்வாகம் | இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பான பதவியணிக் கடன்களை அறவிடும் செயலாற்றல் பலவீனமான நிலையில் இருந்தது. |
| (ஆ) | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் | செயற்பாடற்ற கணக்குகள், உறுதிச்சீட்டை ஒன்றாக கட்டுதல், தங்க நகை அடகுப் பொருட்களை ஏற்றுக்கொள்ளல், பாஸ் புத்தக பிரதான பதிவேடுகள், பாஸ் புத்தக செயற்பாட்டு இருப்பு பதிவேடுகள், திறப்பை வைத்திருத்தல், பாதுகாப்பக பூட்டுக்களை கையாளுதல், காசு எல்லைகள், ஏரீஎம் அட்டையை கையாளுதல், கோரிக்கை உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அடியிதழ்சேர் புத்தகங்களை பூர்த்திசெய்தல், கடன் நிர்வாகம், இரகசியக் குறியீடு செயலிழக்கச் செய்தல், பாதுகாப்பு முறைமைகள் போன்றன உள்ளடங்கிய கிளை அறிவுரைப் பதிவேடுகள் ஆகியவற்றின் பரப்புக்களில் கிளை செயற்பாடுகள் தொடர்பில் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கைகளுடன் இணங்காமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | சில சந்தர்ப்பங்களில், நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்து உருப்படிகள் சில கிளைகளில் பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்கவில்லை. அதேநேரம், கிளைகளில் காணப்படும் உருப்படிகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வாடிக்கையாளர் கணக்குகளை திறத்தல் மற்றும் மூடுதல் | கேவைசீ படிவங்கள், அடையாள அட்டைப் பிரதிகள், விண்ணப்பதாரர் மற்றும் உத்தியோகத்தரின் கையொப்பங்கள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரைகள், கணக்குகளை மூடுவதற்கான எழுத்துமூலமான வேண்டுதல் என்பன காணப்படாமை |